REGD. No. M. 6311

::PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 303

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 21உ வியாழன் (3—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 22உ வெள்ளி (4—6—54)

வடவர் ஆதிக்கம் வலுவடைகிறது!

இந்தி கட்டாயமில்லையாம்!—ஆனால் கற்றவர்க்கே வேலையாம்!

அரசியல் சட்டத்தை ஆதாரம் காட்டுகிறார் இந்தி ஏகாதிபத்தியவாதி!

(நமது தனி நிருபர்)

சென்னை, ஜூன் 3—

"தென் இந்திய மக்கள், தங்கள்மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து தொடர்ந்து கிளர்ச்சி செய்து வருகிறார்கள்; முன்பு இங்கு வந்திருந்த இந்தி கல்லெண்ண தூதக் குழுவினரிடம், தென்னாட்டவர் இந்தியை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதையும், இந்தியா ஒரு நாடல்ல—ஒரு உப கண்டம் என்பதையும், மொழி, கலை, பண்பாடு, பழக்க வழக்கம், நாகரீகம், பூகோள, பொருளாதார மாறுபாடுகள், சீதோஷ்ண நிலைகள் சமூக வளர்ச்சிகள் ஆகியவைகளால், வடநாடு வேறு—தென்னாடு வேறு என்பதையும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் இந்திய சர்க்கார் அறிந்து கொண்டிருக்கிறதா?"

—என்று, நமது நிருபர், இந்திய சர்க்கார் கல்வி இலாக்கா பார்லிமெண்டரி காரியதரிசி டாக்டர் ஸ்ரீமாலியை, நேற்று நடந்த பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கும்போது டாக்டர் ஸ்ரீமாலி கூறியதாவது:

"தென் இந்தியாவில் இந்தி தங்கள்மீது கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்ற தவறான அபிப்பிராயம் நிலவுகிறது; வட்டார மொழிகளிலே தான் மாநில அரசின் நிர்வாகம் இருக்கும்; ஆனால், மத்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து கொள்ளவும், வியாபார நிமித்தமும் தான் இந்தி மாநில அரசுகளுக்கு உபயோகப்படும்," என்று மழுப்பினார்.

"அப்படியானால் தென் இந்தியாவில், இந்தி படித்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், ஆங்கிலம் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது ஏன் ஆங்கிலமே இருக்கக்கூடாது? புதியதாக இந்தி ஏன் இருக்கவேண்டும்?'

என்று கேட்கப்பட்டபோது அவர் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலம் அயல் நாட்டு மொழி; இந்தி அப்படி அல்ல," என்றார்.

'தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தைப்போலவே இந்தியும் தமிழர்களுக்கு அன்னிய மொழிதானே?"

என்று ஒரு நிருபர் கேட்டபோது அவர் கூறியதாவது:—

"ஆங்கிலம் வெள்ளைக்காரனால், நம்மை ஆள்வதற்காகத் திணிக்கப்பட்டது; இந்தி அப்படி அல்ல; இப்போது நம்மை நாமே ஆண்டுகொள்கிறோம். தமிழர்கள் இந்தி மொழி பேசுபவர்களையும், இந்தி மொழி பேசுபவர்கள் தமிழ் மொழி பேசுபவர்களையும் ஆளலாம்,"

என்று டாக்டர் ஸ்ரீமாலியுடன் இருந்த திரு. சத்தியநாராயணா குறிப்பிட்டார்.

"இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது தென்னவரும்—வடவரும் சேர்ந்துதான் உருவாக்கியிருக்கிறோம்; ஆகவே அந்தச் சட்டத்தின்படி 15 ஆண்டுகளில் இந்தி இந்தியாவின் தேசிய மொழி ஆக்கப்படுவதுதான் முறை,"

என்று டாக்டர் ஸ்ரீமாலி குறிப்பிட்டபோது இடையில் நமது நிருபர் குறுக்கிட்டுக் கேட்டார்:

"இந்திய அரசியல் சட்டத்தையே தென் இந்திய மக்கள் தங்கள்மீது வடவர் ஆதிக்கம் செலுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட சாசனம் எனக் கருதி அதை எதிர்க்கிறார்களே?" என்றார்.

இக்கேள்விக்கு, டாக்டர் ஸ்ரீமாலி, புன்சிரிப்பைப் பதிலாகத் தந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிட கரும்பின் சிறப்பு

மத்திய மந்திரி கூற்று

★

"வட இந்தியாவில் விளையும் கரும்பு, 'தரம்' குறைவானது மட்டுமல்ல; உற்பத்தியும் குறைவாகும்! வடக்கே ஏக்கர் 1-க்கு 14-லிருந்து 15 டன்கள் வரைதான் விளைகிறது; ஜாவாவில் 56 டன்களும், ஹவாயில் 62 டன்களும் விளைகின்றது; இவைகளோடு ஒப்பிட்டால் வட நாட்டு விளைச்சல் மிகவும் குறைவாகும்."

"ஆனால் இந்த நாட்டிலேயே தென் இந்தியாவில், வடக்கே உள்ள விளைச்சல் போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு கரும்பு விளைகிறது,"

இந்த செய்தியை மத்திய சர்க்கார் அமைச்சர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் கூறினார்.

மாஸ்கோ மணம் வர!

'காஞ்சீபுரத்திலே உயிர் நீத்தால் மோட்சம் கிடைக்கு மென்று சொல்கிறார்கள். அதற்காகவே, எழுபதைத் தாண்டி, எண்பதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும், காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அங்கேயே வந்து தங்கியிருக்கிறாராம்.

அப்படி நம்பிக்கையுள்ள காஞ்சீபுரம் மக்களை பல்லவா, நண்பர் ஜீவா, மாஸ்கோவிற்கு சமதர்ம மணம் நுகர அழைக்கிறார். வருவார்களா என்ன? கூப்பிட்டால், 'கொஞ்சம் இரு; கருட சேர்வை பார்த்துவிட்டு வருகிறேன்,' என்பர்; அடுத்துக் கூப்பிட்டால், 'ஆனித் திருமஞ்சனமும் ஆடிப் பூரமும் முடியட்டும்' என்பர். அதையும் தாண்டி அவர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டால், பண்டரிபுரம் வந்ததும், இந்த பக்தர்கள், பத்து நாட்களுக்கு அங்கே தங்கிவிட்டுத்தான் வருவேன் என அடம் பிடிப்பார்களே! அதற்கும் அப்பால் அழைத்தால்—காசி, குருக்ஷேத்திரத்தைக் கண்டதும் பக்தர்கள் காலடிகூட அடுத்து எடுத்து வைக்கமாட்டார்களே! 'எனக்கு ஏனய்யா, சமமும் தர்மமும்! என் வாழ்வு இங்கேயே சாயுஜ்யமானால், அதுவே, சாலோக, சாமீப சாயுஜ்ய விருந்தாகும்! என் பாபம் விமோசனத்திற்கு இந்தக் கங்கைக் கரையே சரி, நீ போப்பா' என்றுதான் கூறுவார்கள் தவிர, மாஸ்கோ மணம் நுகரவா வருவார்கள்? மாஸ்கோ மணத்தை நுகரும் சக்தியை மக்களைப் பெறச் செய்வது தி. மு. கழகந்தான்!"

—கொடுங்கையூர் தி. மு. க. கூட்டத்தில் அண்ணா

1952 அக்டோபரில், ரோமில், ஜெட் விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதின் காரணம், விமான மோட்டியின் தவறேயாகும்.

மோட்சலோகப் பாதை!

★

"நாங்கள் வந்த பாதை, மோட்ச லோகம் பாதை போன்று மேடு பள்ளம் நிறைந்ததாக இருந்தது. ஆட்சியாளர்களைக் கேட்கிறேன்—ஒரு பெரும் நகரத்தை அடுத்துள்ள பாதைகள், அவை கிராமப்புறமாயிருப்பதாலேயே இவ்வளவு மடுமோசமாயிருப்பது நியாயமா? பாதை ஓரத்திலே பார்த்தேன்—பாதி ஓலை பிய்த்துபோன மண் குடிசைகள்; அங்கேயும் மனிதர்கள்தானே வாழ்கிறார்கள்? அவர்கள் பாடுபட்டு உழைப்பவர்களாயிற்றே! ஓட்டைக் குடிசையிலே குன்றிக் கிடப்பானேன்? பதில் சொல்ல வேண்டாமா? ஆட்சியாளர்கள்?

"மயிலாப்பூரிலும், மாம்பலத்திலும் வீட்டுக்குவெளியே செல்லும் காரின் சப்தமும், வீட்டினுள் கேட்காதவாறு வீட்டைச் சுற்றிலும் பூந்தோட்டமும், குளிர் மரச் சோலையும் இருக்கின்றனவே! இத்தனைக்கும் அவர்கள் நம்மை விட அதிகமாக உழைக்கிறார்களா என்றால் இல்லையே! பிறர் உழைப்பிலேயே, உடல் பெருத்து குறையாது வாழ்பவர்களாயிற்றே! அவர்கள் வாழும் அங்கே அத்தனை அமைதி நிலவுவானேன்? உழைத்து ஓடாகும் இவர்கள் வாழும் இங்கே இத்தனை அவதி இடம் பெறுவானேன்? அங்கே ஆனந்தம் பொங்கி வழிவானேன்? இங்கே அல்லல் அச்சுறுத்துவானேன்?

—கொடுங்கையூர் தி. மு. க. கூட்டத்தில் அண்ணா

மதுவிலக்கு தோல்வியே!

முன்னாள் அமைச்சர் கூறுகிறார்

பெங்களூர், ஜூன் 3—

"சென்னை, பம்பாய் ராஜ்யங்களில் மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது; அங்கு மட்டுமல்ல—மதுவிலக்கை பரீட்சித்த இடங்கள் அனைத்திலும் அது தோல்வி அடைந்துவிட்டது;

"மதுவிலக்கை முதன் முதலாக அமல் செய்த சென்னை மாகாணத்தில்நான் அமைச்சராக இருந்த போதிலும் நான் இதைக் கூறுகிறேன்"

இவ்வாறு சென்னை சர்க்காரின் முன்னாள் அமைச்சர் கே. ஆர். காரந்த பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

புதிதாக ஐக்கிய கர்நாடகம் அமைக்கப்பட்டால் அதன் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க மதுவிலக்கை ரத்து செய்தால் போதும் என்று அவர் மேலும் கூறினார்.

ஆறாயிரம்-அடுத்த போரில் அறுபதாயிரமாகும்!

"ஆச்சாரியார் ஆட்சிப்பீடத்தில் இருந்தபோது ஆணவமாகச் சொன்னார்—'இவர்களின் கணக்கைச் சரி செய்கிறேன்; சரித்திரத்தில் மட்டுமே இவர்கள் இனி இடம் பெறுவர்; இவர்களை, நாட்டிலே நடமாட நான் அனுமதியேன்; இவர்கள் எல்லாம் ஈ, எறும்பு போன்றவர்கள்; நசுக்கியே தீருவேன்'—என்று! என்ன ஆயிற்று? நம்மை நசுக்கிவிடுவேன் எனப் பேசியவரின், நசுக்கும் கட்டை விரல் தானே ஒய்ந்தது! ஈயும், எறும்பும் சாரைசாரையாக வல்லவா படை எடுத்தது! முடிந்ததா ஆச்சாரியாரால் நம்மை ஒழிக்கவிட? நாம் பெற்றிருக்கும் பலம் எவ்வளவு என்பதைத் தெரியாததால்தானே ஆச்சாரியார் ஆணவத்தோடு பேசினார்! அதே ஆணவம், அவரை ஆட்சிப் பீடத்திலிருந்தும் அகற்றியது!

"6 ஆயிரம் பேர் சிறை சென்றோம், சென்ற போராட்டத்தில்—ஆச்சாரியார், எதிர்பார்த்திருக்க மாட்டார்! நான் சொல்கிறேன், இன்று எச்சரிக்கைபோடு, சர்க்காருக்கு—அடுத்த போராட்டங்களில் எல்லாம் 60 ஆயிரம் பேர் சிறை செல்வோம், இதை நான் அலங்காரத்திற்காகவோ, அன்றி ஆட்சியாளரை மிரட்டவோ அல்ல சொல்வது—தி. மு. கழகம் நாட்டவரிடம் பெற்றிருக்கும் பலம் எத்தகையது என்பதை நாடாளும் நல்லவர்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்!"

—கொடுங்கையூர் தி. மு. க. கூட்டத்தில் அண்ணா

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 3—6—54 வியாழன்

தேனபிஷேகம்!

சுண்ணாம்புக் காளவாயில் தள்ளி வேக வைத்துச் சாகடிப்பது!

பாராங்கல்லைத் தூக்கி மண்டையில் போட்டுக் கொல்வது!

பாம்புகள் புரளும் படு குழியில் தள்ளி மாளச் செய்வது!

யானைக் காலின் கீழ் போட்டு மிதித்துச் சாக வைப்பது!

தூக்கு மரத்தில் தொங்க விட்டுப் பிணமாக்குவது!

கடு விஷமூட்டிக் கொல்வது!

கழுத்தை நெரித்துக் கொன்று போடுவது!

கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் போட்டுச் சாகடிப்பது!

காட்டு மிருகங்களை விட்டுக் கடிக்கச் செய்து சாகவைப்பது!

ஆளைச் சாகடிக்க அக்கிரமக்காரர்கள் இதுபோல் பலப்பல வழிகளைக் கண்டறிந்தனர்—ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து கொண்டு!

கேட்டால் குலை நடுக்க மெடுக்கக்கூடியதும், கண்டால் மனம் உடைபட்டுவிடக்கூடியதும், நினைத்தாலே நெஞ்சு வேகக்கூடியதுமான கொலை பாதக முறைகளைக் கொடுங்கோலர்கள் கையாண்டு வந்தனர்; ஆனால், கொடுங்கோலர்களிலே சிலர், இதே கொலை பாதகத்தை, நாகரிகம் பூச்சுடன், கலை மெருகுடன் செய்திடவும் வழி கண்டறிந்தனர்.

கொலைதான்—எந்த முறையில் செய்தாலும்—முறை எதுவாயினும் கொலைச் செயல் கண்டிக்கப்பட வேண்டியது தான்; ஆனாலும், கேட்போரின் காதுகளுக்கும், காண்போரின் கண்களுக்கும் வேதனையும் ஆத்திரமும் ஏற்படாதபடி, 'நாசுக்கான' முறைகளை கொடுங்கோலரில் தந்திரசாலிகள் கையாண்டனர்!

'காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்தான்,' என்று பிறர் கூறிட இயலாவண்ணம், கொலைபாதகத்தைப் புரிந்தனர்.

பட்டாளத்துக் கட்டுப்பாட்டினை மீறுபவர்களைத் தண்டிக்க ஒரு படைத் தலைவர் நூதனமான முறையொன்றைக் கண்டுபிடித்தாராம்—ஓடவிட்டுச் சுட்டுக் கொல்வது; சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்வது—என்பது பழைய முறை. நூதன முறைக்குப் பெயர் தேனபிஷேகம்! ஆமாம், ஆளைக் கொல்லத்தான்!!

தண்டிக்கப்பட வேண்டிய போர்வீரனை, காட்டில் ஒரு மரத்தில் பிடித்துப் பலமாகக் கட்டிவிடுவார்களாம்; பிறகு அவன் உடம்பு முழுவதும், தேனைக் குடம் குடமாகக் கொட்டிவிட்டு, வந்துவிடுவாராம்!

உச்சி முதல் உள்ளங்கால் வரை தேன்! இதன் ருசி கண்டு, சாரை சாரையாக, இலட்சக்கணக்கிலே எறும்புகள் கிளம்புமாம்; அவன் உடலை மொய்த்துக்கொண்டிருக்குமாம்; ஒரு நாள் இரண்டு நாட்களில் எலும்புக் கூடுதான் இருக்குமாம்—மரத்தில் கட்டப்பட்ட நிலையில்!! நூதனம்தானே!

கொலைதான்—எனினும், அதை ஒரு கலைபோல ஆக்கிவிட்டதாக அந்தக் கொடியவனுக்கு நினைப்பு!

ஆட்களைச் சாகடிக்கும் கொலைபாதகத்தில் மட்டுமல்ல—கொள்கைகளைச் சாகடிப்பதிலும் நூதன முறைகளை, நாசுக்கான வழிகளை, நாகரிகப் பூச்சுடன் கூடிய நடவடிக்கைகளைக் கையாள்வோர் இருக்கிறார்கள்; தேனபிஷேகம் செய்கிறார்கள்!

கராச்சி, ஜனநாயகத்தைக் கொலை செய்துவிட்டது—யாரும் மறுப்பதற்கில்லை; காரணம் ஆயிரம் காட்டலாம்; எனினும், கிழக்கு வங்கத்திலே நடைபெற்றது ஜனநாயகப் படுகொலை என்பதை எவரும் மறுத்திட முடியாது.

பஸ்லுல் ஹக் — சித்தக் குழப்பமடைந்தவர்; சிறுவார் ஒருகணம்—கண்ணீர் சிந்துவார் மறுகணம்; நான் முஸ்லிம் முதலில் என்றும் முழக்கமிடுவார்—அடுத்த விநாடியே, பாரத் வாசிதான் என்று பாசம் வீசுவார்; அலாதியான சுபாவம் படைத்தவர்—இல்லை என்று கூறவில்லை; எனினும், இப்போது, கிழக்கு வங்க மக்கள் அவருக்குப் பேராதரவு தந்து, ஆளும் உரிமையை அளித்திருக்கின்றனர்.

முஸ்லீம் லீக் படுதோல்வி அடைந்தது; பஸ்லுல் ஹக் கூட்டணி மூலம் கீர்த்தி மிக்க வெற்றி பெற்று, முதலமைச்சரானார்.

ஜனநாயகத் தத்துவத்தின்படி அவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றார்; இப்போது அந்த மந்திரி சபை கலைக்கப்பட்டுவிட்டது; கவர்னர் ஆட்சி புகுத்தப்பட்டிருக்கிறது; இராணுவம் பவனி வருகிறது! என்ன பொருள் இதற்கு? ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது என்பதுதான்.

நள்ளிரவில் தலைவர்களைக் கைது செய்வது; பத்திரிகைகளுக்குத் தடை; வாய்ப்பூட்டுச் சட்டம்;—இவை இன்று கராச்சி சர்வாதிகாரியின் முறையாகிவிட்டது.

பல இலட்சம் மக்கள், ஒரு பொதுத் தேர்தலின் மூலம், தங்கள் நம்பிக்கைக்கு உகந்தவர்கள், ஆளும் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் என்று யாரைத் தேர்ந்தெடுத்தார்களோ அவர்களை விரட்டிவிட்டு, இன்று கராச்சி டாக்காவில் "காலகி தர்பார்" ஏற்படுத்திவிட்டது; ஜனநாயகத்தைக் கூச்சமின்றிக் கொலை செய்திருக்கிறது.

இந்தக் கொலை பாதகம், பாகிஸ்தானுக்கே பெருங்கேடு விளைவிக்கக் கூடியது என்று அரசியல் அறிந்தோர் கூறுகின்றனர்; எங்கும் கண்டனம் கிளம்பி இருக்கிறது; எத்தகைய சமாதானத்தை முகமதலி கூறினாலும், அவை, இரத்தக் கறையை மறைக்கும் போட்டுக் கொள்ளும் வெல்வெட்டுக் கையுறை போன்றதேயொழிய, கறை போகாது!

ஜனநாயகக் கொலை புரிந்திருப்பது, முகமதலி மட்டுமல்ல—கராச்சியில் தலைவிரித்தாடும் சர்வாதிகார முறை, டில்லியிலும் இருக்கத்தான் செய்கிறது; ஆனால் அந்தக் கொலைதான், எவ்வளவு நாசுக்காக, நாகரிகப் பூச்சோடு செய்யப்பட்டு வருகிறது!

தேனபிஷேகம் செய்கிறார்கள் டில்லி சர்வாதிகாரிகள்! கராச்சிச் சர்வாதிகாரியோ, பட்டப் பகலில் கடைவீதியில் கொடுவாள் கொண்டு ஆளின் தலையைச் சீவுகிறார்!!

ஜனநாயகக் கொலை, இரு இடங்களிலும் நடைபெறுகிறது—கராச்சியிலும், டில்லியிலும்; முறை, வேறு வேறு!

ஒன்று, பக்குவமறியாத கொடுங்கோலன் முறை—கராச்சி! மற்றொன்று, பசப்பு தெரிந்த கொடுங்கோலர் முறை—டில்லி!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையை ஒதுக்கிவிட்டு, மக்களின் ஆதரவு காரணமாக அமைக்கப்பட்ட அமைச்சர் குழுவைக் கலைத்துவிட்டு, கவர்னர் ஆட்சியைப் புகுத்துவது, நிச்சயமாக ஜனநாயகக் கொலை — அதனாலேயே உலகு கண்டிக்கிறது, முகமதலி தர்பாரை—நாமும் கண்டிக்கிறோம்.

ஆனால் நேரு பண்டிதர் இதே ஜனநாயகக் கொலையைச் செய்திருக்கிறார்— பஞ்சாபில், ராஜஸ்தானில்! சட்டசபைகள் கலைக்கப்பட்டன! மந்திரிகள் விரட்டப்பட்டனர்! மாகாண நிர்வாகத்தை மத்திய சர்க்காரே அமுல் நடத்திற்று. ஜனநாயகம் கொலைதான் செய்யப்பட்டது. ஆனால், அந்தக் கொலை, கலைவடிவில் காட்சி தந்தது!

இன்று முகமதலியும், முஸ்லீம் லீக தலைவர்களும், மத்திய சர்க்காரும் எத்தகைய துணிவான, தூய ஜனநாயகத்தை அழிக்கக் கூடிய படுகொலை செய்தார்களோ, அதனையே டில்லியில் நேரு பண்டிதர் செய்தார்!

இதோ, இடிபடுகிறார் முகமதலி; இழிவாகக் கருதப்படுகிறார்; கண்டனக் கணைகள் கராச்சி நோக்கிப் பாய்கின்றன; மாஸ்கோ ரேடியோ கூடக் கண்டித்திருக்கிறது.

நேரு பண்டிதர் செய்த ஜனநாயகக் கொலை பற்றி ஏன் கண்டனம் கிளம்பவில்லை; காரணம் இதுதான்—நாசுக்காக, கலை போல் வடிவு கொடுத்து நடத்தப்பட்ட கொலை அது—தேனபிஷேகம்!

ஜனநாயகம், நேரு பண்டிதர் ஆட்சியிலே படுகொலை செய்யப்பட்டது—ஓரிடத்தில் மட்டுமல்ல—ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல!

திருவாங்கூர் - கொச்சியில் காங்கிரஸ் மந்திரி சபையிடம் சட்ட சபை நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றிற்று; ஜனநாயகத்துக்குக் கட்டுப்பட்டு மந்திரி சபையைக் கலைக்கவில்லை பண்டிதர்; புது மந்திரி சபை அமைத்துக் கொள்ளும் ஜனநாயக உரிமையை வழங்கவில்லை; எந்த காங்கிரஸ் மந்திரி சபையிடம் நம்பிக்கை இல்லை என்று சட்டசபை தீர்ப்பளித்துவிட்டதோ அதே மந்திரி சபையையே நிர்வாகத்தில் உட்காரவைத்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்தார். டில்லிக்கு, கராச்சிக்கு ஏற்பட்ட அவமதிப்பு ஏற்பட்டதா? இல்லை—செயல் ஒன்றுதான்—முறை வேறு!

'பாகிஸ்தானின் விரோதி இந்த பஸ்லுல் ஹக், துரோக காரியத்தில் ஈடுபடுகிறார்; எனவே, பதவியை விட்டு விரட்டினேன்—என்று முகமதலி கூறுகிறார்; கேட்கும் நமக்கெல்லாம், முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் போலாகிவிடுகிறது—கண்டிக்கிறோம்.

ஆனால் காஷ்மீரச்சிங்கமென்றும், பண்டிதரின் அந்தரங்க நண்பர் என்றும், பாகிஸ்தானின்பகைவனென்றும்பாராட்டப்பட்ட ஷேக் அப்துல்லா, முதலமைச்சர் பதவியிலிருந்து திடீரென்று விரட்டப்பட்டு, சிறையில் போட்டு அடைக்கப்பட்டார். ஜனநாயகக் கொலைதானே! ஆனால், கூற முன்வந்தனரா, இன்று கராச்சியைக் கண்டிக்கும் காங்கிரஸ் கண்ணியர்கள்? இல்லை!—ஏன்?— அதுதான் சூட்சமம்—ஜனநாயகத்தைப் படுகொலை செய்துகொண்டே, அதை மறைத்து மக்களை மயக்கும் கலையை டில்லி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது; கராச்சிக்குத் தெரியவில்லை!

கொலை நடக்கிறது இரு இடங்களிலும்—முறைதான் வேறு வேறு!!

மத்திய பிரதேச காங்கிரஸ் மந்திரி சபையில் பிளவு

சுக்லாவுக்கும்-படேலுக்கும் பிணக்கு

நாகபுரி, ஜூன் 1—

மத்திய பிரதேச காங்கிரஸ் அமைச்சர் குழுவிற்குள் குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது.

முதல் மந்திரியாக இருப்பவர் ரவிசங்கர் சுக்லா; அபிவிருத்தி இலாகா மந்திரியாக இருப்பவர் ஆர். கே. படேல்.

சம்பந்தப்பட்ட அமைச்சரை அலட்சியப்படுத்திவிட்டு, அபிவிருத்தி இலாகாவில் சுக்லா, அடிக்கடி குறுக்கிடுகிறார் என்பது குழப்பத்திற்கான காரணம்.

மந்திரி இராஜிநாமா செய்துவிட்டார்—செய்வதென முடிவிற்கு வந்துவிட்டார்—என, அங்குள்ள பத்திரிகைகள் பிரசாரம் செய்துள்ளன.

ஆந்திராவில் உர விநியோகம்

ராஜ்யத்தில் உள்ள விவசாயிகளுக்கு உரம் விநியோகம் செய்யும் பொறுப்பை ஆந்திர அரசு கூட்டுறவு சங்கங்களுக்கும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் தருகிறது

டன் ஒன்றுக்கு ரூ 322 வீதம் சர்க்கார் இந்த வியாபாரிகளுக்கு உரம் தரும். வியாபாரிகள், விற்பனை வரி யல்லாது டன் ஒன்று ரூ. 345 வீதம் விவசாயிக்குத் தரும்.

சென்ற ஆண்டு கொள்முதலில் 11,000 டன் உரம் இப்போது ஆந்திர அரசாங்கத்திடம் இருப்பதுடன் சிந்திரி உர உற்பத்தி சாலையிலிருந்து இந்த மாதத்தில் புதிய உரமும் கொள்முதல் செய்யப்பட விருக்கிறதாம்.

இந்த ஆண்டு, விவசாயத்திற்கு சுமார் 75 000 டன் உரம் தேவையிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

யோஷிடா உலக சுற்றுப் பயணம்

ஜப்பான் பார்லிமெண்டில் கேள்விகள்

ஜப்பானியப் பாராளு மன்றத்தில் பிரதமர் யோஷிடாவின் உலக சுற்றுப் பயணம் பற்றி சரமாரியான கேள்விகள் எழுந்தன

எதிர்க் கட்சியினரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில், பிரதமரின் உலக சுற்றுப் பயணத்திற்கு ரூ 42,65,600 செலவாகும் என்று அறிவிக்கப்பட்டது

யோஷிடாவின் சுற்றுப் பயண நோக்கத்தை வெளிப்படையாகக் கூறவேண்டுமென்றும், இவ்வளவு பெரிய தொகையைச் செலவிட சட்டசபையின் அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் வற்புறுத்தினர்.

நெய்வேலி நிலக்கரி

இதுவரை ரூ. 25 லட்சம் செலவு

திட்டம் தீட்ட ஆங்கிலக் கம்பெனி

சென்னை, ஜுன் 3—

நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கம் அமைக்க மாதிரி திட்டத்திற்கு இதுவரையில் ரூ 25 லட்சம் செலவாகியிருக்கிறது. மொத்த செலவின் மதிப்பீடு சுமார் ரூ 66 லட்சமாகும்.

இதுவரை 90 அடி அளவிற்கு சுரங்கம் வெட்டப்பட்டிருக்கிறது

மாதிரித் திட்டம் சீக்கிரமே முடிவடையும் என்பதால் வியாபார முறையில், திட்டமொன்றைத் தீட்டுவதற்கு இந்திய சர்க்கார் இங்கிலாந்தில் உள்ள 'பவல் டப்பின்' கம்பெனியாருடன் ஏற்பாடுகள் செய்கின்றனர்.

பீடித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

2,000 பேர் ஈடுபட்டனர்!

வேலூர், மே 31—

இரண்டாயிரம் பீடித் தொழிலாளர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்கள் எல்லாம், ஐம்பார்பீடித் தொழிற்சாலையின் பல கிளைகளில் வேலை செய்பவர்கள்.

சரியாக சுற்றப்படாத பீடிகளுக்கு சம்பளம் குறைப்பதை எதிர்த்தும், 1,000 பீடிகளுக்குத் தேவையான பீடி இலையின் நிறையில் குறைவு இருப்பதைக் கண்டித்தும், சில காலமாகவே இத்தொழிலாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

செவ்வாயன்று ஆறு பீடித் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படவே இரண்டாயிரம் தொழிலாளரும் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

வேலூர் நகர சபைத் தலைவரான திரு சீதாபதி, இன்னும் தோழர்கள் ஸ்ரீராமுலு நாயுடு முதலியோர் அடங்கிய தூதுக் குழு ஒன்று, மாவட்ட கலெக்டரான திரு ஏ வெங்கடேசனைச் சந்தித்து, வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள நிலையை எடுத்துக் கூறினதாகத் தெரிகிறது.

ஆந்திர நாடு

புத்தகம் தயாராகிறது

சென்னை ராஜ்யத்திற்கு இருப்பது போன்றே—ஆந்திர ராஜ்யத்திற்கென்று தனியாக புத்தகம் ஒன்று தயாராகிறது.

படங்கள், தொழில் விபரப் புள்ளிகள், கனிப் பொருள்கள், சாலைகள், விவசாயம் மற்றும் இதர விபரங்களின் முழுச் செய்தியும் இப்புத்தகத்தில் காணப்படும்.

இந்திய நல்லெண்ணத் தூதுக் குழு—நேபாளத்தில் எதிர்ப்பு!

அரசியல் கட்சிகளின் தூண்டுதல் அல்லவாம்!

மக்களின் விரோத மனப்பாவமே முக்கிய காரணமாம்!

சென்ற வெள்ளிக்கிழமை இந்திய மக்கள் சபை உறுப்பினர் 15 பேர்களைக் கொண்ட ஒரு 'நல்லெண்ணத் தூதுக் குழு' நேபாளத்துக்குச் சென்றது

அவர்களை எதிர்த்து நேபாள மக்கள் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அந்த ஆர்ப்பாட்டம் அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் விளைவு எனச் செய்தி தரப்பட்டது.

அக்காரணத்தை, நேபாள தேசியக் காங்கிரசின் தலைவரான பி. பி. கொய்ராலா மறுத்திருக்கிறார்.

ஆர்ப்பாட்டத்திற்கும் அரசியல் கட்சிகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது எனவும், நேபாள மக்களின் தன்மான உணர்வே, இந்திய நல்லெண்ணத் தூதுக் குழுவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய, மக்களைத் தூண்டியது எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய சர்க்காரும், நேபாள சர்க்காரும் செய்துக் கொண்டுள்ள கோசி ஒப்பந்த நிபந்தனைப்படி நேபாளத்தில், வரி ஒன்றும் கொடுக்காமல், குறிப்பிட்ட இடத்தை இந்தியா சொந்தமாக உபயோகித்துவர உரிமை பெற்றிருக்கிறது. அதுவும், இந்திய இராணுவத் தூதும், இந்தியத் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களும், ஆலோசகர்களும் நேபாளத்திற்கு வந்து இருப்பதும், நேபாள மக்களின் உள்ளத்தை அரித்துக்கொண்டு இருக்கிறது.

இந்திய சர்க்காரின் இப்போக்கு, நேபாள உள்நாட்டு விவகாரத்தில் இந்திய சர்க்கார் தலையிடுவதாக இருக்கிறது என்று நேபாள மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். இதன் விளைவாகத்தான், இந்திய மக்கள் சபை உறுப்பினர்களைக் கொண்ட 'நல்லெண்ணத் தூதுக் குழு'விற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது என்று, காங்கிரஸ் தலைவர் விளக்கம் தந்துள்ளார்.

★

ஆர்ப்பாட்டச் செலவறிய...!

இந்தியப் பாராளு மன்ற உறுப்பினர்களில் நல்லெண்ண தூதுக் குழுவினருக்கு எதிராக நேபாளத்தில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு எவ்வளவு செலவாகியது என, நேபாள அரசு பரிசீலிக்கிறது.

வழக்கமான ஆர்ப்பாட்டங்களைப் போலன்றி, வெள்ளியன்று நடந்த ஆர்ப்பாட்டங்களில், பெரும் அளவு மோட்டார் வாகனங்கள் உபயோகிக்கப்பட்டதாகச், சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விமான நிலையச் சட்டங்களுக்குப் புறம்பாக, ஆசிரியரல்லாத பலர், சினிமாப் படம் தயாரிக்கும் காமராக்களுடன், விமான நிலையத்தினுள் சென்று, ஆர்ப்பாட்டங்களைப் படம் பிடித்தது பற்றிக் கிடைத்த தகவல்கள் பற்றியும் நேபாள அரசு புலன் விசாரணை செய்து வருகிறது.

உலர்ந்த சாணத்திலிருந்து எரிகாற்று

சமைக்க, விளக்கேற்ற பயன்படும்!

உலர்ந்து போன சாணத்தை எரித்து எரிகாற்றை உற்பத்திச் செய்து, அதைக் கொண்டு சமைக்கவும் விளக்கேற்றவுமான ஆராய்ச்சியில், டெல்லியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் வெற்றி பெற்றிருக்கிறது.

ஏற்கனவே கரியைச் சுட்டு எடுக்கும் எரிகாற்றிலிருந்து, விளக்கெரிப்பதில் வெற்றி கண்டுள்ளது போலவே, பசுஞ் சாணத்தை எரிப்பதால் ஏற்படும் காற்றிலிருந்து விளக்கெரிப்பதில் வெற்றி கிடைத்திருக்கிறது

மற்ற ஆராய்ச்சி நிலையங்களில் பரீட்சை பார்த்ததில், நாலிலிருந்து ஆறு மாட்டின் சாணங்களைக் கொண்டு, சிக்கனமான செலவில் சிற்றூர் மக்கள் விளக்கொளியைப் பெறக்கூடும் என முடிவு கட்டப்பட்டிருக்கிறது. எரிக்காற்றை உற்பத்தி செய்யும் யந்திர சாதனத்தை 200-ரூபாய் செலவில் பெற முடியுமாம்.

புது நட்சத்திரம்

கலிபோர்னியாவில் கண்டுபிடித்தனர்

பசதேனா, ஜூன் 1—

இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் கோளத்தில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாய் ஏற்பட்ட நட்சத்திரம் ஒன்றை கலிபோர்னிய ஆராய்ச்சிக் கழகத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

பூமிக்கு எதிர்முகமாய் இந்த நட்சத்திரம் விநாடிக்கு 1000 மைல்வேகத்தில் சுற்றுகிறதாம். ...ல்வின் நாட்டு வான ஆராய்ச்சியாளர் முதல் முதலாக மே 4-ம் தேதியன்று இந்த நட்சத்திரத்தைப் படமெடுத்தார். என்று கூறப்படுகிறது.

பின்னர் மீண்டும் பெரிய அளவில் புகைப்படம் ஒன்று "மவுண்ட் பால மோர்ஜியண்ட் டெலஸ்கோப்" மூலம் எடுக்கப்பட்டதாம்.

எல்லைக் கமிஷன் வரும்!

சித்தூர், மே 31—

"சித்தூர் இன்னும் இதர மாவட்டங்கள் ஆகியவை குறித்த, சென்னை—ஆந்திர மாநில எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைக்க, ஜூன் இறுதிக்குள், மத்திய அரசு, ஒரு எல்லைக் கமிஷனை நியமிக்கலாம்," என தோழர் கே விநாயகம் எம். எல். ஏ, இன்று தோழர் ஜி கே சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டார்.

மதுவிலக்கு எதிரொலி!

ஆந்திர மந்திரிகள் ராஜினாமா?

குண்டூர், மே 31—

"சட்ட சபையின் முடிவை நிறைவேற்ற ஆந்திர அமைச்சர் சபை தவறினால் விபரீதம் விளையும்,"

என்று தோழர் கோபால் ரெட்டி கூறினார்.

ஆந்திர மந்திரி சபையிலுள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் மதுவிலக்குப் பிரச்சினையில், மேலிடத்தாரின் நோக்கப்படியே நடந்துகொள்வார்களாம். சட்டசபையின் முடிவை நிறைவேற்ற வேண்டுமென்று முதலமைச்சர் டி பிரகாசம் விரும்பினால் காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினாமா செய்வர் என்று தெரிகிறது

சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்ற எண்ணமுடைய காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவோடு சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவார்கள் என்று தெரிகிறது.

ஆந்திர சட்ட சபையின் காங்கிரஸ் உறுப்பினர்கள் மிகவும் மனக் கலக்கம் அடைந்துள்ளனர்.

தென்னாட்டிற்குத் தனியாக ஒரு ஆராய்ச்சி நிலயம் வேண்டும்

ஆலை அதிபர்களின் கோரிக்கை

அதற்காகப் போராடுவதாக காமராசர் வாக்குறுதி

கோவை, ஜூன் 2—

'நாட்டின் பல பாகங்களிலும் ஆரம்பிக்கப்படும் நெசவாலை ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தும், அகமதாபாத்தில் உள்ள தங்கள் ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்று அகமதாபாத் ஆலை அதிபர்கள் எண்ணுகிறார்கள்; ஆனால், தென் இந்தியாவில் சுதந்திரமான ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருப்பதையே தென்னாட்டவர் விரும்புகின்றனர்,"

—இவ்வாறு, தென் இந்திய ஆலை அதிபர்கள் சங்கத் தலைவர் தோழர் ஆர் வெங்கடசாமி சென்னை முதல் அமைச்சர் தோழர் கே காமராசர் அவர்களுக்கு அளித்த விருந்தொன்றில் கூறினார்

"தமிழ் நாடு ஆலைத் தொழிலில் முன்னேற்றம் அடைந்துள்ளது; தென்னாட்டில் ஆராய்ச்சி நிலயம் ஒன்றை ஏற்படுத்த மத்திய சர்க்கார் உதவ ஒப்புக்கொண்டனர்; இதுவரை 8 லட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது; மைசூர், திரு-கொச்சி ஆலைகளும் இந்த ஆராய்ச்சிக் கழகத்தில் சேர ஒப்புக்கொண்டுள்ளன; சென்னை சர்க்கார் ஆராய்ச்சி நிலயத்திற்கு சரியானதொரு இடத்தைத் தர வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

"தென்னாட்டிற்கென்று தனியானதொரு ஆராய்ச்சி நிலையம் தேவை; வடக்கே உள்ள ஆராய்ச்சி நிலயத்துடன் தொடர்பு கொண்டதாக தென்னாட்டு ஆராய்ச்சி நிலயம் இருக்கக் கூடாது,"

என்ற உணர்ச்சி அந்த விருந்தில் காணப்பட்டது.

தோழர் காமராசர் அவர்கள் பேசியபோது, தென்னாட்டிற்குத் தனியானதொரு சுதந்திர ஆராய்ச்சி நிலயம் தேவை என்பது சரியென்றும், அதற்காக சென்னை சர்க்கார் போராடும் என்றும் கூறினார்.

புதிய கல்வித் திட்டம்

ஆந்திராவில் ஒழிந்தது

வால்டேர், ஜூன் 2—

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஆந்திர நாட்டில் ரத்து செய்யப்படும் என்று ஆந்திர கல்வி அமைச்சர் தோழர் பட்டாபிராம ராவ் ஆந்திர சட்ட சபையில் கூறினார்.

கலை விழா!

வேலூர் மகந்த் ஸ்கூல் விளையாட்டு மைதானத்தில்
(கண்டோன்மெண்ட் ரயில்வே ஸ்டேஷன் ரோடு)
திறந்த வெளி அரங்கில்
6—6—54 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு
அண்ணா அவர்கள் தலைமையில்
M. G. ராமச்சந்திரன் & குழுவினர் நடிக்கும்
"இன்பக் கனவு" நாடகம்
கட்டணம்: ரிசர்வ்டு ரூ. 3—0—0, சேர் ரூ. 2—0—0
பெஞ்ச் ரூ 1—8—0, காலரி ரூ. 1—0—0
ஆண்கள்: தரை அணா 8, பெண்கள்: தரை அணா 6
—K. S. பட்டாபிராமன், அமைப்பாளர்

திருமணங்கள்

★

முக்கூடல், மே. 5—

முக்கூடல் தி. மு. க. உறுப்பினரான தோழர் பொன்னையாவின் குமாரன் தோழர் பசுங்கிளிக்கும், சடையப்பபுரம் தோழர் எஸ். என். சுப்பையாவின் சகோதரி தோழியர் சீதையம்மாளுக்கும் தோழர் திருமணி தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் வை. அருணாசலம், மா. சு. முத்துகுட்டி, எஸ். என். சங்கரசப்பு, எஸ். என். சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். திருமணத்தின் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை அளிக்கப்பட்டது

* * *

விருத்தாசலம்—

2—5—54ல், விருத்தாசலம் வட்டம் வடவாடி சிற்றூரில், தோழர் பி. எஸ். இராமநாதன் தலைமையில் தோழர் க. வெங்கடேசனுக்கும்—தோழியர் சீதாலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது

* * *

மாயூரம்—

28—4—54 புதன் காலை 8 மணியளவில் மாயூரம் ஆதிதிராவிடர் வீதியில் தோழர் அப்புசாமிக்கும்—தோழியர் பூசத்தம்மாளுக்கும் திருந்திய திருமணம் நடைபெற்றது. அதுபோது சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் குறித்து தோழர்கள் லட்சப்பா, து காசிநாதன், வ. துரைராஜ், கே. எஸ் ஷண்முகம் ஆகியோர் பேசினர். தோழர் எஸ். சோமசுந்தரம் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்தார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது.

* * *

அய்யம்பேட்டை—

9—5—54 காலை 8 மணிக்கு தஞ்சை அய்யம்பேட்டையில் தோழர் எம் என் ஏ ஈஸ்வரன்-தோழியர் இராசம்பாள் சீர்திருத்தத் திருமணம் தோழர் டி. கே சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பாராட்டுரை வழங்கினர் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது.

* * *

பட்டுக்கோட்டை—

27—5—54 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் பட்டுக்கோட்டை சாமு முதலி தெருவில் மாவட்ட பதிவாளர் முன்னிலையில் தோழர் ரெங்கநாதன்—சரோஜா திருந்திய திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது.

* * *

தேவக்கோட்டை—

27—5—54ல், தோழர் சுந்தரத்திற்கும் — தோழியர் உமயாளுக்கும் திருமணம் தேவக்கோட்டையில் நடைபெற்றது. தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் சொற்பொழிவாற்றினார். 'நம் நாடு' இதழுக்கு ரூ 1 அளிக்கப்பட்டது.

குறிப்பு:—இத் தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

க. அன்பழகன் சொற்பொழிவுகள்

செம்பொன்னார்கோவில்—

26—5—54 மாலை 6-30-க்கு, தி. மு கழக சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். அழகிரிசாமி தலைமை வகித்தார். தோழர்கள் அறிவுடைநம்பி, என். சி. பன்னீர்ச்செல்வம், ஆர். பாலகுருசாமி, க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் க. அன்பழகன் பேசுகையில் ஆச்சாரியார் புகுத்திய புன்மைக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தும், மக்கள் பகுத்தறிவுப் பாதையில் நடக்க வேண்டிய அவசியத்தை விளக்கியும், திராவிட நாடு உரிமை பெறுததால், விடுதலை அடையாததால் ஏற்பட்டுவரும் அழிவையும், இழிவையும் எடுத்துக் காட்டினார்.

• • •

தி. மு. கழக துவக்க விழா

திட்டை (சீர்காழி):

இவ்வூர் தி மு கழகக் கிளை துவக்கக்கூட்டம் 25—5—54 மாலை 7 மணிக்கு தோழர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் அறிவுடைநம்பி கொடியினை உயர்த்தி வைத்தார். தோழர் ஆர். பாலகுருசாமி கிளையினைத் துவக்கி வைத்து, தி. மு. கழகம் எத்தகைய நல்ல கொள்கைகளைக் கொண்டுள்ளதென்று எடுத்துக் காட்டி, மக்களை ஆதரிக்கக் கேட்டுக் கொண்டார். இறுதியாகத் தோழர் அன்பழகன் அவர்கள், சமூக வாழ்க்கையில் ஆரியத்தால் விளைந்துள்ள கொடுமைகளையும், அவைகளைக் களைந்து, நாம் ஒன்றுபட்டு வாழ்வதற்குத் திராவிட இன உணர்ச்சி கொள்ள வேண்டியிருப்பதையும், திராவிட இனம் வாழ நாடு உரிமை பெறவேண்டியதையும் எடுத்துக் கூறிச் சொற்பொழிவாற்றினார்.

பம்பாய் தென் இந்திய ஆதித்திராவிட மகாஜன சங்கம்

9—5—54ல், தாராவி (பம்பாய்) ஒ. த. அப்பாசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பல அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், 14-ம் ஆண்டுப் பேரவையை இம்மாதம் 30-ம் தேதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது

• • •

12-5-54ல், தாராவியிலுள்ள அலுவலகத்தில், தோழர் தி. க. மாடசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, வரவு—செலவு கணக்குகள் கவனிக்கப்பட்டு, மற்றும் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலக அரங்கில்

வாஷிங்டன் :

அணுசக்திக் கட்டுப்பாடு பற்றிய தனது திட்டத்தை ரஷியா நிறைவேற்ற முடியாமல் செய்து விட்டது.

* * *

அமெரிக்கா இதுவரை அணுசக்தி ஆயுதங்களுக்காக 9,000 மில்லியன் டாலர்கள் செலவிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

* * *

கம்யூனிஸ்டுகளை எப்படி அடக்குவது என்பதை, தன் சர்க்கார் நன்கு அறிந்திருக்கிறது என்பதையும் அது சர்க்காரின் 24 மணி நேர வேலை என்றும் ஐசன்ஹோவர் கூறினார்.

★

பாங்காக் :

தாய்லாந்து சர்க்கார் உலக மார்க்கெட்டுகளின் நிலவரத்தை ஒட்டி தங்கள் நாட்டில் அரிசி விலையைக் குறைக்க முடிவு செய்தனர். இதுபற்றி தாய்லாந்து பிரதமர், பிரிட்டனின் தென்கிழக்கு ஆசிய கமிஷனரான மாகடனால்டும் கலந்து பேசினார்கள்.

★

கொழும்பு :

இந்தியாவின் ராஜ்ய சர்க்காரில் சிலவற்றிற்கு இலங்கை செல்ல அனுமதி அளிக்க இலங்கை சர்க்கார் அளித்திருந்த உரிமையை இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொண்டது. இனி டில்லி, சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயமே அனுமதி அளிக்கும்.

* * *

இலங்கை இந்தியக் கமிஷனர் சி. சி. தேசாய் டில்லி சர்க்காருடன் கலந்து பேச டில்லிக்குப் புறப்பட்டார். புறப்படு முன்பாக அவர் இலங்கைப் பிரதமரைச் சந்தித்தார்.

★

டோக்கியோ :

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஜேம்பார்சி என்ற டாக்டர் ஜப்பான் மருத்துவ கழகத்தில் பேசியபோது இருதயத்தில் கூபம் ஏற்பட்டால் 95 சத வீதம் குணமாகி விடுகிறது என்று கூறினார்.

★

சைகோன் :

இந்தோ-சீனப் போருக்காக சைகோனில் சேர்த்து வைத்திருந்த ஏராளமான வெடிகுண்டுகளும், வெடி மருந்துகளும் தீப்பிடித்து நாசமடைந்தன என்றும், அந்த சத்தம் கேட்டு நகர மக்கள் பயந்து போனார்கள் என்று பிரெஞ்சு சர்க்கார் அறிவிக்கிறது.

* * *

சைகோனுக்கு அருகே பத்து மைல் தொலைவில் உள்ள இடத்தை வியட்மின் அருப்புகள் பிடித்ததை ஒட்டி அங்கே போர் கடுமையாக நடைபெறுகிறது.

★

ஜினீவா :

ஏராளமான மாநாடுகள் இங்கே நடைபெற்றாலும், உலக தொழிற் சங்கம் மாநாட்டின் 37-வது கூட்டம் ஆரம்பமாகியது. முன்னாள் பிரெஞ்சு பிரதமர் பால் ரமடியர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

தோழர் கிருஷ்ண மேனன் லண்டனிலிருந்து மீண்டும் ஜினீவா வந்து சேர்ந்தார். மங்தவுடன் அவர் பிரிட்டிஷ் பிரதிநிதி டேஷங் நாடனைச் சந்தித்துப் பேசினார்.

★

வியன்னா :

ஹங்கேரிய கம்யூனிஸ்டு கட்சியினர் இனிமேல் 5 செயலாளர்களைத் தேர்ந்தெடுக்குமாம். இதுவரை 4 பேர் இருந்தனர்.

கேப்டவுன் :

'நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து சுதந்திரத்திற்காகப் பாடுபடுவோம்,' என்ற தலைப்பில் ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

★

போர்ட் செயிட் :

தூரக் கிழக்குப் பகுதிகளுக்குத் தேவையான 100 விமானங்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று வெள்ளிக்கிழமையன்று செல்லும் என்று அறிவிக்கப்படுகிறது. இவை இந்தோ-சீனப் போர்க்களத்துக்குச் செல்கலாம்.

★

கெய்ரோ :

மேற்கத்திய நாடுகளின் இராணுவக் கூட்டுறவில் அரபு நாடுகளின் பங்கு என்ன என்பது பற்றி சவூதி அரேபிய மன்னர் இபின்சாவுதுடன் பேசப்போவதாக எகிப்து தேசியப் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் சாலே சலீம் அறிவித்தார்.

★

பாரிஸ் :

தெற்கு லாவோசில் உள்ள டோனிடாலப் என்ற இராணுவத் தளத்தை பிரெஞ்சுத் துருப்புகள் காலி செய்துவிட்டு வெளியேறினர் என்று பாரிசில் அறிவிக்கப்படுகிறது. கம்யூனிஸ்டுகளின் கடும் எதிர்ப்புதான் இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

★

தைப்பே :

தேசியச் சீனப் பகுதியில் உள்ள சியாங்கின் துருப்புகள் மூன்று மைல் தொலைவில் உள்ள கம்யூனிஸ்டு சீனப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு பகுதிகளிடையே கடல் தடைபாக இருப்பினும் சியாங்கின் துருப்புகள் சுட்டனவாம்.

★

கம்ப்பாலா :

உகந்தாவில் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் 'நெருக்கடி நிலைமைப் பிரகடனத்'தைக் கண்டித்து உகந்தா தேசியக் காங்கிரஸ், பிரிட்டனின் காலனி இலாகா அமைச்சர் ஆலிவர் லிட்டில்டனுக்கு தந்தி ஒன்று அனுப்பியிருக்கிறது.

★

மெல்போர்ன் :

மென்சி சர்க்கார் மீண்டும் பதவிக்கு வந்திருப்பதை ஒட்டி, சர்க்கார் சமீபத்தில் தென்கிழக்கு ஆசியப் பிரச்சினைகளை அனைத்தையும் பற்றி ஆலோசிக்கும் என்று ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் கேசி கூறினார்.

★

ஏதென்ஸ் :

சமீபத்தில் நடைபெறப் போகும் கிரேக்க—யூகோ இராணுவ ஒப்பந்தத்தால் இரு நாடுகளுக்கிடையேயுள்ள உறவைப் பலப்படுத்துவதுடன் உலக சமாதானத்திற்கும் பலன் அளிக்கும் என்று கிரேக்கப்பிரதமர் அலெக்சாண்டர் கூறினார்.

★

நியூயார்க் :

அமெரிக்க சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட போர்டோரிகோ தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆறு பேர் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று வாதாடினார்கள். இந்த அறுவரில் ட்ருமனைக் கொலை செய்ய எத்தனித்ததாக ஆயுள்தண்டனை அனுபவிக்கும் ஆஸ்கர் கலோ சாலின் மனைவியும் ஒருவர் ஆவார்.

கழகக் கூட்டங்கள்

★

வசிஷ்டபுரம்

4—6—54 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு

பேசுவோர்

க. அன்பழகன்
ஆர். பாலகுருசாமி
ம. பொன்னம்பலம்
தி. கோ. சிங்காரம்

★

புது ஆயக்குடி

5—6—54 மாலை 7 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

வேதாரண்யம்

கீழ வீதியில்

5—6—54 மாலை 5 மணிக்கு

தலைவர் : சி. கனகசுந்தரம்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

கல்வி திட்ட ஒழிப்பு பாராட்டுக் கூட்டம்

5—6—54 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில், பெத்துநாய்க்கன்பேட்டை காசி விஸ்வநாதர் கோவில் திடலில் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், என். வி. நடராசன், தோழியர் தருமாம்பாள் மற்றும் பலர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

4—6—54 மாலை 6 மணிக்கு சென்னை, வண்ணைபம்பதி தியாகராயர் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில், தோழர் ஆ. ம. அரைத் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'நாட்டின் நிலை' என்பது பற்றி தோழர்கள் இ. பாண்டுரங்கன், எல். எஸ். ஜி. ராசன், டி. செல்வராசன் ஆகியோர் பேசுவர்.

ஆக்ராவில் ஊரடங்கு சட்டம் மீறப்படுகிறது

★

ஆக்ராவிற்கு பதினைந்து மைல் தொலைவிலுள்ள ஆர்தயா கிராமத்தில் போலீசாருக்கும் பொது மக்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. போலீஸ் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்; 80 பேருக்கு மேல் காயமுற்றனர். என்று தெரிகிறது.

பாசன வரியை அதிகப்படுத்தியதற்காக பிரஜா-சோஷலிஸ்டுகள் நடத்தும் போராட்டம் சம்பந்தமாக சில விவசாயிகளைக் கைது செய்யப் போலீசார் கிராமத்துக்குச் சென்றபோதுதான் இக் கைகலப்பு ஏற்பட்டது.

அப் பகுதியில் 24 மணி நேரத்திற்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வாரண்டின்றி போலீசார் கைது செய்யாதபடி ஏராளமான தாய்மார்கள் போலீசாரைத் தடுத்து நிறுத்தினார்கள்

ஊரடங்குச் சட்டத்தை மீறியதாக 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

லண்டன் :

செயின்ட்பால் கதீட்ரலைச் சேர்ந்த வேர்தர் கானன் கலின்ஸ் ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் செய்யப் புறப்பட்டார். இவர் கறுப்பர்கள் பிரச்சினையில் ஆதரவு தரும் பிரிட்டிஷ்காரர் ஆவார்.

செய்திக் கதிர்

அரை கட்டணம்

மூன்று வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர்களுக்கு பஸ்களில் அரை கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டது. இது சம்பந்தமாக சென்னை சர்க்கார் மோட்டார் வாகன விதிகளைத் திருத்தும் என்று தெரிகிறது.

★

பேரம்

டில்லியில் உள்ள தாய்லாந்து வர்த்தகக் குழுவிடம், தாய்லாந்து என்ன விலைக்கு இந்தியாவுக்கு அரிசியை கொடுக்கத் தயார் என்பது பற்றிப் பேரம் நடைபெறுகிறது.

★

மனவேதனை

பஞ்சாப் ஹூர் டின்னில் செய்யப்பட்டதைக் கேட்டவுடன் ஜின்னு அவாமி லீக்கின் தலைவர் சுஹராவர்த்தி பெரிதும் மனவேதனை அடைந்தார்; அவர் உடல் நலமின்றி துன்புறுகிறார்.

★

கிளர்ச்சி

திருச்சி மாவட்ட விவசாய சங்கத்தைச் சேர்ந்த 300 பேர் திருச்சி கலெக்டர் காரியாலயத்திற்கு ஊர்வலமாகச் சென்று குத்தகையைக் குறைக்க வேண்டுமென்றும், விவசாயிகளின் வெளியேற்றத்தைத் தடுக்கவேண்டுமென்றும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

★

அறிவுரை

தயவு தாட்சண்யம் இன்றி நிர்வாக ஊழல்களை ஆடிட்டர்கள் எடுத்துக் காட்டவேண்டும் என்று சென்னை அக்கவுண்டென்டு — ஜெனரல் ஆபீசின் புதிய கட்டிடம் ஒன்றுக்கு கல் நாட்டியபோது இந்தியக் குடியரசின் உபதலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறினார்.

பிரெஞ்சிந்தியா

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலம் பற்றி பாரிசில் நடைபெறும் பேச்சு வார்த்தைகள் முறிந்து போகும் என்று கருதப்படுகிறது.

★

வழக்கு

பாக். பஞ்சாபின் முன்னாள் முதல் அமைச்சர் மியான் மும்தாஜ் தௌலத்தானா மீது ஊழல் நிர்வாகம் நடத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு பாகிஸ்தான் பெடரல் கோர்ட் லாகூரில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

★

தீண்டாமை

மக்களுடைய மனப் போக்கில் மாற்றம் ஏற்பட்டால்தான் தீண்டாமையைப் போக்க முடியும் என்று கோவையில் நடைபெற்ற ஆதி திராவிடர்கள் மாநாட்டில் சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜ் கூறினார்.

★

மொழி பெயர்ப்பு

ரஷ்யாவில், சாணக்கியரின் அரசியல் சூழ்ச்சி நூலான அர்த்த சாஸ்திரத்தை மொழி பெயர்க்கப் போகிறார்களாம்!

★

விபத்து

சிட்டகாங்கில் கட் பாசஞ்சர் வண்டி தடம் புரண்டு ஒருவர் மாண்டார்; 7 பெட்டிகள் பாதையைவிட்டு இறங்கிவிட்டனவாம். வேகமாக ஓடியதே இந்த விபத்துக்குக் காரணம் என்று அறிவிக்கப்படுகிறது.

★

கடன்

தேசியக் கடனுக்கு ஏப்ரல் 19-ந் தேதி முதல் இன்றுவரையில் 80 கோடியே 56 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது என்று தெரிகிறது

வடவர் ஆதிக்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

வந்திருந்த ஒரு பார்ப்பனப் பத்திரிகையின் பார்ப்பன நிருபர் ஒருவர் நமது நிருபரைக் கேட்டார் :—

"தட்சிண பாரத் இந்தி பிரச்சார சபை மட்டும் தமிழ் ஆந்திர, கேரள, கன்னட மாநிலங்களில் லட்சக்கணக்கானவர்களை இந்தி பேசக் கற்றுத் தந்திருக்கின்றது; தென் இந்திய மக்கள் இந்தியை யாரும் கட்டாயப் படுத்தாமலேயே படிக்கிறார்கள்; அப்படி இருக்க, நீங்கள் எப்படி தென்இந்திய மக்கள் இந்தியையும், இந்திய அரசியல் சட்டத்தையும் எதிர்க்கிறார்கள் என்று சொல்கிறீர்கள்?" என்றார்.

உடனே நமது நிருபர் குறிப்பிட்டார் :—

"இந்தியை தென்னாட்டின் ஒரு பகுதி மக்கள் (பார்ப்பனர்) விரும்பிப் படிக்கிறார்கள்; ஆனால், பெரும் பகுதி மக்கள் (திராவிடர்) எதிர்க்கின்றனர் என்பதை மறந்து விடக் கூடாது" என்று சுடச் சுட பதில் சொன்னார்.

"மாநில அரசுகள், இந்தியை உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாகவும், பரீட்சைக்குரிய பாடமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்திய அரசாங்கம் விரும்புகிறது." என்று டாக்டர் ஸ்ரீமாலி கூறினார்.

"மாநில அரசுகளை அவ்வாறு செய்யுமாறு கட்டாயப்படுத்துவீர்களா?" என்று நமது நிருபர் கேட்டார்.

"கட்டாயப்படுத்த மாட்டோம்; ஆனாலும், 15 ஆண்டுகளில் இந்தி எப்படியும் தேசிய மொழியாக இருக்கும்." என்று டாக்டர் ஸ்ரீமாலி பதில் கூறினார்.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு

சுற்றுப்பயணம்

ஜூன் 4: ஒட்டன்சத்திரம் காலை: திருமணம் மாலை 6 மணி கனியூர் கூட்டம்
5: புது ஆயக்குடி
6: பெரியகுளம்
7: ஆண்டிப்பட்டி
8: குழிவிபம்பாறை
11: காட்டுப்புத்தூர் காலை: திருமணம்; மாலை: பொதுக்கூட்டம்
12: மேட்டுப்பாளையம் (திருச்சி)
13: துறையூர்
18: மாரனேஹள்ளி (சேலம்)
21 முதல் 30-ந் தேதி வரை தஞ்சை மாவட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,